மலர் : 20
இதழ் : 7

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

ஜீலை 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்



## குடும்பம் : நம்பிக்கையால் நங்கூரமாக்குவோம்.

## இயக்குநரிடமிருந்து

இறை இயேசுவில் அன்பானவர்களே! நம்பிக்கையால் நங்கூரமாவோம் என்றும் சிந்தனை வழியாக குடும்பங்கள், அன்பியங்கள் என இறைமக்களின் வாழ்வில் அவநம்பிக்கை நீக்கி இறை நம்பிக்கை புத்துயிர் பெற்றிட அனைவருக்கும் வாழ்த்துக்களும், ஜெபங்களும்.

எதிர்பார்ப்பின் தொடக்கமும் அனுபவத்தின் முடிவும் தான் வாழ்க்கை. வாழுகின்ற வாழ்க்கையில் நிறைவைப் பெற்றுக்கொள்ள அன்பும், பண்பும் நிறைந்த மனம் தேவை. அதுமட்டுமல்லாமல் தடுமாறும் வாழ்வை நிலையானதாக மாற்ற நம்பிக்கை என்னும் நங்கூரத்தால் தாங்கிப் பிடித்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமானது.

குடும்பம் என்பது திருஅவையின் ஒரு அங்கம். வாழ்க்கை என்பது நாணயத்தின் இருபக்கங்களைப் போல இன்பமும் துன்பமும் நிறைந்தது. வாழ்வில் ஏற்படும் துன்பங்களைத் தாங்கி ஆறுதலளிப்பது நம்பிக்கை என்னும் அருமருந்தே. இறை நம்பிக்கை இதயங்களில் வேரூன்றும்போது சிந்திக்கும் திறன் அதிகரித்து, பொறுமையோடு எதையும் எதிர்கொள்ள வேண்டிய துணிச்சலைப் பெற்றுக்கொள்ளலாம்.

திருக்குடும்பத்தில் இருந்த அமைதியும், நிறைவும், மகிழ்வும் இன்றையக் குடும்பங்களில் நிலைக்க பெற்றோர் தங்கள் நேரங்களை, அனுபவத்தை, நம்பிக்கையை, எதிர்நோக்கை குழந்தைகளோடு பகிர்பவர்களாகவும், வாழ்க்கையை வழிகாட்டும் முன்மாதிரிகளாகவும் திகழ வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் இறை ஒளியாம் அறிவுரையைப் பெற்று, நம்பிக்கைக் கொண்டு, பின்செல்பவர்களாக இருக்க வேண்டும். “பாதையது செம்மையானால் காலடிகள் தடம் பதிக்கும்”. சவால்களை எதிர்கொண்டு துணிந்து செயல்படும் இளம் தலைமுறையினரின் எழுச்சி மிக்க செயல்பாடுகளால் எதிர்கால வாழ்வை அலங்கரிப்போம்.

கட்டளை என்பது ஒரு விளக்கு, அறிவுரை என்பது ஒளி, கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி (நீ.மொ. 6:23) என்ற இறைவார்த்தைக்கிணங்க இறைவனின் கட்டளையை ஏற்று, முழுநம்பிக்கைக் கொண்டு, அறிவுரை என்னும் ஒளியை மனதில் ஏற்றி, நன்மையையும் தீமையையும் சமநிலையாகக் கொண்டு நல்வாழ்வு வாழ்வோம். குடும்பங்கள் அடையும் நல்வாழ்வும் பயிற்சியும் அன்பிய குடும்பங்களை வாழ்விக்கும், வளம் பெறச் செய்யும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி. M. **ஆல்வின் விஜய்**
இயக்குநர், அன்பியப் பணிக்குழு

முதல் வாரம்

# இயற்கையோடு இணைந்தால் ஆரோக்கியமான வாழ்வு

தமிழறிஞர். புலவர் **மு. அருளப்பன்**

மனித வாழ்க்கை ஆரோக்கியமானதாக அமைய வேண்டும் என்பது அனைவரது ஆவல் அதற்கு இயற்கையோடு இணைத்து வாழ்தல் அவசியமாகிறது.

**இறைவன் தந்த கொடைகள் :**

ஆரோக்கிய வாழ்வுக்கு இறைவன் தந்த கொடைகளே இயற்கை செல்வங்கள். நிலம் நீர், காற்று என்பன இயற்கை செல்வங்கள் ஆகும். அத்தகைய இயற்கைச் செல்வங்களோடு நாம் இணைந்து வாழ்ந்திட பழகிக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்திட உடல் ஆரோக்கியம் முக்கியமானதாகும். மனிதன் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தால்தான் அவனால் தனது ஒவ்வொரு கடமைகளையும் சீராக ஆற்றிட முடியும்.

**வாழ்வுக்கு ஆதாரம் :**

நமது வாழ்வுக்கு ஆதாரமாக நிலம் காணப்படுகிறது. அந்நிலத்தினை சார்ந்துதான் நமது வாழ்வுக்கு நலம் விளைவித்து நம்மை ஆரோக்கியத்துடன் பாதுகாக்கும் அனைத்தும் அமைந்துள்ளன. குறிப்பாக, நிலத்தில் உள்ள மரம், செடி, கொடிகள் நமது உடல் ஆரோக்கியமாக திகழ்ந்திட உணவு பொருள்களை தருவதுடன், அசுத்த காற்றினை உட்கொண்டு சுத்தமான ஆக்சிஜனை வெளிவிடுகிறது. அதுபோலவே நிலத்தினைச் சார்ந்து காடுகளும் மலைகளும், அவற்றைச் சார்ந்த உயிரினங்களும் வாழ்கின்றன. அத்தகைய இயற்கைச் சூழலுடன் இணைந்து நாம் வாழ்வதன் மூலம் ஆரோக்கிய வாழ்வை அடைய முடியும்.

அதுபோலவே, நீர் நமது வாழ்வுக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிறது. எனவே, கழிவுகளும், குப்பைகளும் நீரினை அசுத்தப்படுத்தாமல் பாதுகாக்க வேண்டும்.

மேலும், காற்று நமது உயிர் மூச்சாகிறது. காற்றினை இன்றைய சுற்றுச்சூழல் மாசுபடுத்துகிறது. எனவே காற்றை மாசுபடுத்தாமல் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**நமது கடமை :**

இன்றைய சமுதாயத்தில் மக்கள் தொகை நெருக்கமும் இட நெருக்கடியும் இயற்கையோடு இணைந்து வாழ நமக்கு சவாலாக உள்ளது. எனினும், நமது இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். நமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குப்பைகளை குவிக்காமலும், நீரில் வீசாமலும்

கையாள வேண்டும். இயற்கையான உணவு வகைகளை உண்ண வேண்டும். காடுகளையும், கனிம வளங்களையும் பாதுகாக்க வேண்டும். பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டைத் தவிர்த்தல் வேண்டும்.

இவ்வாறு இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால் ஆராக்கியமான வாழ்வு வாழலாம். அது நமக்கு மட்டுமல்ல நமது எதிர்கால சந்ததியினரையும் ஆரோக்கிய வாழ்வுக்கு அழைத்து செல்வதாக அமையும்.

**சிந்தனை**

1. இறைவன் தந்திருக்கும் இயற்கை வளங்கள் யாவை?
2. இயற்கை வளங்களைப் பாதுகாக்க நான் என்னென்ன செய்வேன்? பகிர்வோம்.
3. நமது அன்பியத்தில் இயற்கை வளங்களை பாதுகாத்தல் பற்றி பயிற்சிகள், விழிப்புணர்வு பேரணிகள் பற்றி திட்டமிடுதல்

இரண்டாவது வாரம்

## நீங்க மட்டும் இல்லைன்னா :

திருமதி. **ஷோபா ராணி**

இந்த நீங்க யாரு?
உங்களுக்குள்ளே ஒரு கேள்வி
சற்றுப் பொறுங்கள் வேறு யாரும் இல்ல.
பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கியப் பெற்றோரே
இவர்கள் இல்லாமல் இருந்தால்.
அன்பும், பாதுகாப்பும் இல்லாத
வெற்று வெளியாய் சுழலும் புழுதியாய்.
இருண்டதோர் பாதையாய்
மாறிடுமே இவ்வுலகம்
பெற்றோர் என்பவர்கள் வெறும் ரத்த பந்தங்கள் மட்டுமல்ல.
நம்மை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள்!
கடவுளின் படைப்புத் திட்டத்தில்
பங்கேற்றவர்கள்!
கடவுளால் முன்குறிக்கப்பட்டவர்கள்!
நாம் வாழும் உலகில்
இறைவனால் நமக்குத் தரப்பட்ட
அன்புப்பரிசு தான் இவர்கள்.
நம்மைப் பாதுகாத்து
நமக்காக, வாழ்நாள் முழுவதும்
உழைக்கும்

தன்னலமற்ற தியாகிகள்!
நமது வாழ்வின் முதல் ஆசிரியர்கள்!
நமது உற்ற நண்பர்களும் இவர்களே!
நாளும் பொழுதும் நமது
வழிகாட்டிகள்...
நாம் சிரிக்கும் போது, நம்முடன் சிரித்து
நாம் அழும்போது நமது விழிநீரைத் துடைத்து,
நாம் தடுமாறும் போது
சரியான பாதை காட்டும்
நிழல்கள் இவர்கள்...

தன்னைக் காப்பாற்றுவார்கள் என்று நினைத்து, எந்தப் பெற்றோரும் தன் பிள்ளைகளைப் படிக்க வைப்பதில்லை. மாறாக தன்நிலைத் தன் பிள்ளைகளுக்கு வந்துவிடக்கூடாது என்று நினைத்து, பிள்ளைகளைப் படிக்க வைப்பவர்களே நமது பெற்றோர். பிள்ளைகள் வாழ்வில் உயரங்களை எட்டும்போது எல்லையில்லா மகிழ்வை அனுபவிப்பவர்கள்.

எதைக் கொடுத்தும்
வாங்க முடியாத அரியாசனம்
தந்தையின் தோள்!
யாரும் இழக்க விரும்பாத தொட்டில் அன்னையின் மடி!
நீ தேடிச் சென்றாலும் விலகிச் செல்பவர்கள்
மனிதர்கள்.....
நீ விலகிச் சென்றாலும்
உன்னைத் தேடி வருபவர்கள்
உன்னைப் பெற்றவர்களே!

ஈரைந்து மாதங்கள் வயிற்றிலும், வாழ்நாள் முழுவதும் தன் மனதிலும், நம்மை சுமப்பவள் தாய். நம் சிறு வயதில் தோளிலும், வாழ்நாள் முழுவதும், தன் நெஞ்சிலும் சுமப்பவர் தந்தை.

ஆண்டுதோறும் ஜீன் மாதம் 1-ம் தேதி "பெற்றோர் தினம்" கொண்டாடப்படுகிறது. ஆண்டிற்கு ஒருநாள் அல்ல ஆண்டு முழுவதும் கொண்டாடப்பட வேணிடியவர்கள் நமது பெற்றோர்கள்.

பெற்றோர் என்கின்ற தெய்வங்கள் இல்லத்தில் வைத்து கொண்டாடப்பட வேண்டியவர்கள். முதியோர் இல்லங்களுக்கு மூடுவிழா நடத்துவதும், புறக்கணிக்கப்பட்ட முதியோரை அடையாளம் கண்டு, இல்லங்களில் தங்கள் பிள்ளைகளோடு இணைந்து வாழச் செய்வதுமே - இதை வாசிப்போரின் தலையாய கடமையாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

உயிர் கொடுத்து, உருக் கொடுத்து நம்மைப் பிள்ளையாய் பெற்றவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் நாம் அனைவரும் நன்றிக்கடன் பட்டவர்களே!

அன்பைக் கொட்டி
பாசத்தைக் காட்டி வளர்க்கும்
பெற்றோரால் ஏமாந்த பிள்ளைகள் இங்கு இல்லை.

ஆனால், பிள்ளைகளால் ஏமாந்த பெற்றோரே
அதிகம் அதிகம்...

**நீங்க மட்டும் இல்லேண்ணா!**

இந்த உலகம்.
வண்ணங்கள் இல்லா ஒரு ஓவியம் போல
இசை அற்ற ஒரு பாடல் போல...
உயிர் அற்ற ஒரு சிற்பம் போல...
முகவரி இல்லா கடிதம் போல...
மை இல்லா எழுதுகோல் போல...
சக்கரம் இல்லா வண்டி போல...

**நீங்க மட்டும் இல்லேண்ணா!**

நாங்க இந்த பூமிப் பந்தை
பார்த்திருக்க வாய்ப்பே இல்ல
நீங்க மட்டும் இல்லேன்னா,
நாங்க இவ்வளவு தூரம் வளர்ந்து
ஆளாகி இருக்க வாய்ப்பே இல்ல
நீங்க மட்டும் இல்லேன்னா
எங்கப் படிப்பு: பதவி பட்டம் எதுவுமே இல்ல
மொத்தத்தில் நீங்க மட்டும் இல்லேண்ணா
நாங்க இல்ல. இல்லவே இல்லை.
நீங்க வேர்கள் நாங்கள் விழுதுகள்
விழுதுகளைத் தாங்கிநிற்கும் வேர்கள் நீங்கள்.
பெற்றோரைத் தாங்க வேண்டியது
பிள்ளைகளின் கடமை.

நாம் சிறு குழந்தையாய் இருந்தபோது, அவர்கள் நம்மைப் பராமரித்தார்கள். அவர்கள் வயதில் மூத்தவர்கள். ஆனாலும் மனதளவில் குழந்தை நிலைக்கு ஆகும்போது குழந்தையாய் நமது கரங்களில் தவழ்பவர்கள் கையெடுத்து கும்பிடவில்லை என்றாலும் தேவையான உணவும். உடையும், உறைவிடமும் கொடுத்து, பேணிப் பராமரிக்க வேண்டியது தலைமுறைகள் செய்யும் மாபெரும் கடமை,

நிழலெனத் தொடர்ந்து
நிஜமெனக் கரம்பிடித்து
தாலாட்டில் உறங்க வைத்து
தலைக்கோதி தினம் வளர்த்து
பள்ளிச் சென்று திரும்புகையில்
பசி போக்கும் தாயவள்!
வெளியேச் சென்று வருகையில்
காவலனாய் நிற்கும் தந்தையவர்!
சின்னஞ்சிறு காயமென்றாலும்
கண்கலங்கி நிற்கும் பாசமிது!
சிறிய அளவில் வெற்றிகள்
என்றாலும்

பேரன்பால் வாழ்த்தும்
பரந்த மனமிது
இல்லறத்தின் இனிமை இவர்கள்!
இன்பத்தின் ஊற்று இவர்கள்!
வாழ்வின் பொருள் இவர்கள்!
வாழும் கோவில் இவர்கள்!
கொண்டாடுவோம் பெற்றவர்களை..
பொறுப்புடன் பாதுகாப்போம்.
புண்ணியங்கள் பல நம்மைத் தேடிவரும்
இறைவனைத் தேடி நாம் செல்ல வேண்டிய தேவை இல்லை
அந்த இறைவனே நமதருகில் வருவார்!

மூன்றாவது வாரம்

# அன்பியம் ஓர் பங்கேற்பு திருஅவை

திரு. C. **கிறிஸ்து ராஜ்**,
மேல்பாலை.

**முகத்தில் சிரிப்போடும்**
**இதயத்தில் அன்போடும்**
**சிந்தனையில் தெளிவோடும்**
**வாழ்வோம் அன்பியத்தில்......**

பங்கு என்னும் உயிரணுவைச் செயலாக்கமுள்ளதாகவும், இறையாட்சியை இம்மண்ணில் நிலைநாட்டவும் துவங்கப்பட்டதே அன்பியம். அன்பியம் ஆரம்பிக்கப்பட்ட நாள்களில், தந்தையே நாம் ஒன்றாய் இருப்பதுபோல் இவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக என்ற இறைமகன் இயேசுவின் வாக்கிற்கிணங்க அனைத்து மக்களும் வேற்றுமைகளை களைந்து இணைந்துச் செயல்பட்டார்கள். அவ்வாறு செயல்பட்டதால் மனிதநேய செயல்கள் பெருகின. மக்கள் தங்கள் தன்னம்பிக்கையை வளர்த்டுக்கும் தளமாக அன்பியக் கூட்டங்களை பயன்படுத்தினர். அப்படி உருவான திறமையானவர்களின் இணைந்த செயல்களால் பங்கு சமூகம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் காண அடிப்படையாக அமைந்தது. இது ஒவ்வொரு குடும்பமும் (கணவன், மனைவி, பிள்ளைகள்) அன்பிய கூட்டங்களில் இணைந்து செயல்பட்டால் மக்கள் உருவாக்கம் நடைபெற்று பங்கு சமூகம் உயர காரணமாகவும் அமைந்தது. ஆனால், இன்று பங்கு என்னும் ஆலமரத்தை தாங்கி பிடிக்கும் விழுதுகளாக திகழவேண்டிய அன்பியங்கள் அதன் நோக்கங்களை மறந்து மக்களின் பங்கேற்பு இல்லாமல் பொலிவிழந்துக் காணப்படுகின்றன.

கொரோனாவின் தாக்கத்திற்கு பிறகு மனித உறவுகள் அலைபேசியில் அடங்கிப்போயுள்ளது. இன்று மனிதன் முழுமனிதனாக இப்பூமியில் வாழ நான்கு தேவைகளை எதிர்நோக்குகின்றான். **1. அன்பு, 2. ஏற்பு, 3. பாதுகாப்பு, 4. மதிப்பு.** இந்த 4 முக்கிய தேவைகளையும் அன்பிய மக்கள் ஒருவர் மற்றொருவருக்கும் கொடுத்து அன்பிய கூட்டங்களில் பங்கேற்பை உறுதிப்படுத்துவோம்.

**1. அன்பு :**

அன்பியத்திலுள்ள அனைத்து குடும்பங்களும் பகைமை உணர்வுகளை களைந்து; அன்பியம் அனைத்திற்கும் மேலானது என்ற அன்புணர்வோடு பங்கேற்பது. அன்பே கடவுள் அன்பே அன்பியம் என்ற மனநிலையில் நாம் அன்பு செய்து வாழ பங்கேற்க அழைக்கிறது.

**2. ஏற்பு :**

அன்பியத்திலுள்ள அனைத்து மக்களையும் சாதி, மத, இன, மொழி இவைகளை கடந்து அனைவரும் கடவுளின் அன்பு பிள்ளைகள் என்ற உணர்வோடு; வானிலிருந்து விழும் மழைத்துளியை நிலம் ஏற்றுக்கொண்டு மக்கள் வாழ் தகுதியான பூமியாக மாற்றுவது போல அனைவரையும் ஏற்றுக்கொண்டு பொறுப்புக்களை பகிர்ந்தளித்து அவர்களை பார்வையாளர்களாக அல்ல பங்கேற்பாளர்களாக ஏற்றுக்கொள்வது.

**3. பாதுகாப்பு :**

அன்பிய மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பில் நாள்தோறும் வாழ, வளர அன்பிய குடும்பங்கள் ஒருவர் மற்றொருவருக்காக செபிப்பது.

**4. மதிப்பு :**

மதியாதவர் வாசல் மிதியாதே. இது நம் மூத்தவர் அன்பியத்திலுள்ள அனைவரும், சிறியவர் முதல் பெரியவர் வரை, தங்களிடையே உயர்ந்தவர் என்றோ தாழ்ந்தவர் என்றோ, படித்தவன் என்றோ படிக்காதவன் என்றோ, வேறுபாடுகளை களைந்து, ஒருவருக்கொருவர் மதிப்பளித்து வாழும்போது இன்றும் அன்பியத்தில் பங்கேற்பு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

இந்த சிறந்த மனித உருவாக்கத்தை நிலைநிறுத்தி அன்பியங்கள் செயல்படும்போது, அன்பிய மக்களின் எதிர்பார்புகளும் தேவைகளும் நிறைவேறும். அப்போது அன்பியம் செயலாக்கம் பெறும்; இந்த செயலாக்கத்தில் அன்பிய மக்களின் பங்கேற்பு என்பது; இறைவார்த்தை நமக்கு கூறுவதுபோல 30 மடங்கு, 60 மடங்கு, 100 மடங்கு என்று ஏற்றம் பெறும். அதற்கு முதலில் நம்மை நாமே அன்பியத்தில் முழுமையாக ஈடுபடுத்தி மேற்கூறிய 4 பண்புகளில் இந்த அன்பிய மக்களை கட்டியெழுப்பி அன்பியம் ஓர் பங்கேற்பு திருஅவை என்னும் ஆனந்த மலராக பூத்துக்குலுங்க முயற்சிகள் மேற்கொள்வோம்.

நான்காவது வாரம்

# ஐயம் தவிர்த்து நம்பிக்கைக் கொள்

(யோவா : 20 : 27)

அருள்முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**
மறைவட்ட முதல்வர், திரித்துவபுரம்.

"குழப்பங்கள் குழம்பிப் போவதற்காக அல்ல
குழப்பங்கள் உறுதிப்பாட்டில் நிலைத்திருக்க
சந்தேகங்கள் சங்கடப்படுவதற்காக அல்ல
சந்தேகங்கள் சங்கடத்திலிருந்து சந்தோசத்திற்கு இட்டுச் செல்ல
ஐயங்கள் தெளிவற்ற நிலையில் இருப்பதற்காக அல்ல
ஐயங்கள் தெளிவுகளை உருவாக்கி நம்பிக்கையில்
வேரூன்றி வாழ"

**Confusion is for conviction**

**ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்** என்கிற இந்த
வார்த்தை இயேசு தோமாவிடம் கூறியது. (யோவா 20:27)
தோமா சந்தேகப் பேர்வழி அல்ல. மாறாக நாம்
நல்ல ஆழமான நம்பிக்கையோடும், நட்புறவோடும்
வாழ்வதற்கான வழியை உருவாக்கித் தந்தவர்
எல்லோரும் போகின்ற வழியைத் தெளிவுப்படுத்தி
தெரிந்து தேர்வு செய்து தந்தவர் திருத்தூதர் புனித தோமா
எல்லோரையும் போல சிந்திக்காமல்
வித்தியாசமாகச் சிந்தித்து தெளிவுகளைத் தந்து
அவரோடு போவோம் அவரோடு சாவோம் என்று
நம்பிக்கை அறிக்கையிட்டவர்.
நாம் தெளிவுகளைப் பெற மட்டுமே
சந்தேகப்பட வேண்டுமென்று மானுடக் குலத்திற்கே
சொல்லித் தந்தவர் புனித தோமா என்றால்
அது மிகையாகாது.
பிறர் கண்டதையும் கேட்டதையும் மட்டும்
வைத்துக்கொண்டு முடிவுக்கு வருவது தவறு
என்பதைச் சுட்டிக்காட்டி முடிவுரை எழுதியவர்.
கண்டு விசுவசிப்பதை விட காணாமல்
விசுவசிப்பது சிறந்தது என்பதை உலகிற்கே
உணரச் செய்த உன்னதமான மனிதர்.
எனவே நாமும் ஐயங்களைத் தவிர்த்து
நம்பிக்கைக் கொள்வோம்.
தேவையற்ற சந்தேகங்கள் சங்கடங்களை உருவாக்கும்

தேவையற்றக் குழப்பங்கள் குளறுபடிகளை உருவாக்கும்
தேவையற்ற ஐயப்பாடுகள் அழிவுகளை உருவாக்கும்
தேவையற்ற விமர்சனங்கள் வீழ்ச்சிகளை உருவாக்கும்
குடும்பங்களில் தேவையற்ற சந்தேகங்கள்
குடும்பங்களைக் குலைத்திருக்கிறது.
சமூகங்களில் தேவையற்ற சந்தேகங்கள்
சமூகங்களைச் சரித்துப் போட்டிருக்கிறது.
பங்குகளில் தேவையற்ற சந்தேகங்கள்
பிரிவினைகளை உருவாக்கியிருக்கிறது.
உலகில் பல தேவையற்ற சந்தேகங்கள்
உலகையே உருக்குலைத்திருக்கிறது.
எனவே தெளிவுகளை உருவாக்கும்
சந்தேகங்களை மட்டும் கேள்வி கேட்போம்.
மற்றவற்றைத் தவிர்ப்போம்.
மட்டற்ற மகிழ்ச்சியில் திளைப்போம்.
சந்தேகம் சந்தோசத்தைச் சாகடித்து
சங்கடங்களை உருவாக்கிவிடும்.
இவற்றை உணர்ந்து ஐயங்களைத் தவிர்த்து
நம்பிக்கையோடு வாழ்வோம்.

**சிந்தனை**

1. நாம் எதற்காகச் சந்தேகப்படுகிறோம்?
2. நமது சந்தேகத்தால் எழுந்த விளைவுகள் என்னென்ன?
3. நமது சந்தேகத்தால் எத்தனை உறவுகளை இழந்திருக்கிறோம்?

# நலத்திட்டங்கள்

## முளகுமூடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| விலவூர் | தூய சவேரியார் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 2,000/- |
| முளகுமூடு | பூண்டி மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 10,000/- |
| | செபஸ்தியார் அன்பியம் | கல்வி உதவி | 1 | 2,000/- |
| | பெர்னதெத் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 12,500/- |
| | பவுல் அன்பியம் | கல்வி உதவி | 1 | 10,000/- |
| செம்பருத்திவிளை | தூய சவேரியார் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 2,000/- |

## வேங்கோடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| அன்னைநகர் | புனித சூசையப்பர் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 2,000/- |
| இலவுவிளை | புனித லூர்து அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | | ஏழைகள் நல உதவி | 1 | 1,500/- |
| வெள்ளையம்பலம் | தூய குழந்தை தெரசாள் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 500/- |
| காஞ்சாம்புரம் | புனித சூசையப்பர் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| வேப்புவிளை | ஒருங்கிணையம் சார்பாக | மாற்றுத்திறனாளிகள் இல்லம், பெருஞ்சிலம்பு | 1 | 25,000/- |

## திரித்துவபுரம் மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| தோட்டச்சாணி | புனித மத்தேயு அன்பியம் | கருணை இல்லம் | 1 | 5,000/- |
| லூர்துகிரி | புனித வியாகுல அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 1,000/- |
| | வேளாங்கண்ணி அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| | உபகார அன்னை அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| நல்லூர் | புனித சூசையப்பர் அன்பியம் | கல்வி உதவி | 1 | 15,000/- |
| மண்ணான்விளை | சகாய மாதா அன்பியம் | கல்வி உதவி | 1 | 2,000/- |
| சிலுவைபுரம் | 15-வதுஅன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | 16-வதுஅன்பியம் | மருத்துவ உதவி | 1 | 20,000/- |
| தோமையார்புரம் | புனித பேதுரு அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |

## மாத்திரவிளை மறைவட்டம்

**சகாயநகர், ஓசானாம் முதியோர் இல்லத்திற்கு ஒவ்வொரு அன்பிய ஒருங்கிணையமும் கொடுத்த நல உதவிகள்**

| பங்கு | உதவித் தொகை | பங்கு | உதவித் தொகை |
|---|---|---|---|
| மாத்திரவிளை | 5,060/- | துண்டத்துவிளை | 944/- |
| அருளானந்தபுரம் | 6,000/- | கருங்கல் | 2,500/- |
| திக்கணங்கோடு | 1,110/- | பெருமாங்குழி | 1,350/- |

| | | | |
|---|---|---|---|
| மானான்விளை | 900/- | கண்ணன்விளை | 2,925/- |
| மணலிக்குழிவிளை | 6,600/- | பனவிளை | 1,000/- |
| சகாயநகர் | 5,075/- | பூட்டேற்றி | 2,060/- |
| வெள்ளியாவிளை | 1,000/- | பாலூர் | 1,020/- |
| தெருவுக்கடை | 650/- | நட்டாலம் | 1,250/- |
| செந்தறை | 3,981- | தாறாத்தட்டு | 1,100/- |
| முள்ளங்கனாவிளை | 2,300/- | மாங்கரை | 1,150/- |

## காரங்காடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| காரங்காடு | புனித மிக்கேல் முதன்மை தூதர் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| | புனித பாத்திமா அன்னை அன்பியம் | மணவளர்ச்சி குன்றியோர் நல உதவி | 1 | 3,000/- |
| | திருக்குடும்ப அன்பியம் | ஏழைகள் நல உதவி | 2 | 1,500/- |
| ஆரோக்கியபுரம் | 3-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 3,000/- |
| | 8-வது அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 5,000/- |
| கண்டன்விளை | புனித டோமினிக் சாவியோ அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 59,000/- |
| | புனித பாத்திமா அன்னை அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| | | மருத்துவ நல உதவி | 1 | 5,000/- |
| | புனித பிரான்சிஸ் அசிசியார் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 5,200/- |
| பட்டரிவிளை | ஒருங்கிணையம் சார்பாக | இதய நோயாளி | 1 | 1,13,000/- |
| வர்த்தான்விளை | ஒருங்கிணையம் சார்பாக | மருத்துவ உதவி | 2 | 1,00,000/- |
| | 3-வது அன்பியம் | கைம்பெண் நல உதவி | 2 | 57,500/- |
| ஆலன்விளை | 4-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| கொன்னக் குழிவிளை | 13-வது அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 2,000/- |
| தலக்குளம் | ஒருங்கிணையம் சார்பாக | புற்றுநோயாளி | 1 | 1,000/- |
| | | முதியோர் இல்லம் தொலையாவட்டம் | 1 | 5,000/- |
| | | கருணை இல்லம் பட்டரிவிளை | 1 | 5,000/- |
| முரசங்கோடு | புனித கார்மல் அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 650/- |
| | அன்னை வேளாங்கண்ணி அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| | தூய வியாகுல மாதா அன்பியம் | மாற்றுத் திறனாளி உதவி | 1 | 700/- |
| நுள்ளிவிளை (கார்மல்) | 8-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,300/- |
| கல்லுக்கூட்டம் | புனித சிறுமலர் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 3,500/- |
| | புனித பிரான்சிஸ் சவேரியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,500/- |
| | புனித மோனிக்கமாள் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 6,000/- |
| | புனித அருளானந்தர் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 8,500/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 3,000/- |
| பாளையம் அன்னை நகர் | புனித மரிய கொரற்றி அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 4,000/- |
| **காரங்காடு மறைவட்ட அளவில்** | | கல்வி | 25 | 1,600/- |

## பங்களவில் புதிய நிர்வாகிகள்

### காரங்காடு மறைவட்டம்

**பாளையம் அன்னை நகர் :**

தலைவர் : திருமதி. தங்கம்
து.தலைவர் : திருமதி. ஜாண்சி ராணி
செயலர் : திருமதி. விஜயா
து.செயலர் : திருமதி. லதா
பொருளர் : திருமதி. சந்திரகமலா

**தலக்குளம் :**

தலைவர் : திருமதி. குளோறி
து.தலைவர் : திருமதி. ஜெனிலா
செயலர் : திருமதி. மரிய சந்தியா
து.செயலர் : திருமதி. ஜெனிபா
பொருளர் : திருமதி. ஜெயமேரி

**குழிவிளை :**

தலைவர் : திருமதி. லீமா
து.தலைவர் : திருமதி. அஜிதா
செயலர் : திருமதி. ஜினிதா

**வசந்தபுரம் :**

செயலர் : திருமதி. டாபினி

### திரித்துவபுரம் மறைவட்டம்

**தோமையார்புரம் :**

தலைவர் : திரு. கனகதாஸ்
து.தலைவர் : திரு. S. வினு
செயலர் : திருமதி. சித்ர லேகா
து.செயலர் : திரு. ராவில்ஸ்
பொருளர் : திருமதி. மேரி சுஜானா

## பங்கு ஒருங்கிணையத்தின் புதிய நிர்வாகிகள்

### செல்லங்கோணம் :

தலைவர் : திருமதி. சுதா
து.தலைவர் : திருமதி. அமலா
செயலர் : திருமதி. ஜெனட்
து.செயலர் : திருமதி. செல்வராணி
பொருளர் : திருமதி. லதா

### செந்தறை :

தலைவர் : திரு. லிபின் ஆன்றனி
து.தலைவர் : திருமதி. மேரி பியூலா
செயலர் : திரு. ஜாண் லிவிங்சன்
து.செயலர் : திரு. ஜெஸ்டின்
பொருளர் : திருமதி. சுப்பிர கலா

### வெள்ளியாவிளை :

தலைவர் : திரு. A. பீட்டர்பால்
து.தலைவர் : திருமதி. M. மேரி ஜான்ஸி
செயலர் : திருமதி. M.S. பெத்லின் மேரி
து.செயலர் : திரு. T. பீட்டர்ராஜ்
பொருளர் : திருமதி. S. சுபிதா

### சகாயநகர் :

தலைவர் : திரு. பாபு ராஜன்
து.தலைவர் : திருமதி. மெர்லின் சுஜா
செயலர் : திருமதி. ஷெர்லி
து.செயலர் : திரு. ஆல்பின்
பொருளர் : திருமதி. ஜெனிஷா

## முளகுமூடு மறைவட்ட நிர்வாகிகள்

தலைவர் : திரு. பிரான்ஸீஸ் கென்னடி
செயலர் : திருமதி. A. ஆன்ஸிலின் மேரி
து.செயலர் : திருமதி. M. சித்தரா
பொருளர் : திரு. P. சேவியர் சுரேஷ் பாபு

# ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 06.07.2025 | எசா. 66: 10-14C | கலா. 6: 14-18 | லூக். 10: 1-12, 17-20 |
| 2 | 13.07.2025 | இ.ச. 30: 10-14 | கொலோ 1 : 15-20 | லூக். 10: 25-37 |
| 3 | 20.07.2025 | தொ. நூ. 18: 1-10 | கொலோ 1 : 24-28 | லூக். 10: 38-42 |
| 4 | 27.07.2025 | தொ. நூ. 18: 20-32 | கொலோ 2: 12-14 | லூக். 11: 1-13 |

அடித்தளம் விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு.... 9487110298,
8870513177

அன்பிய இயக்குநர்
அன்பிய பணிக்குழு, ஆயர் இல்ல வளாகம்,
உண்ணாமலைக்கடை - 629 179

# குழித்துறை மறைவட்ட
# அன்பியப் பணிக்குழு புதிய நிர்வாகிகள்



## அன்பியப் பணிக்குழு

குழித்துறை மறைமாவட்டம்,

"வாசிப்பை வாழ்வாக்குவோம்" இயங்கலை வினாடி வினா திறனாய்வு படிவம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் (Initial) | : | | Name (initial) | : | |
| ஆண்/ பெண் | : | | Male /Female | : | |
| வயது | : | | Age | : | |
| அன்பியத்தின் பெயர்: | : | | BCC Name | : | |
| பங்கு/கிளைப்பங்கின் பெயர் | : | | Parish/Substation Name | : | |
| வாட்ஸ்அப் எண்: | : | | Whatsapp No. | : | |
| மறைவட்டம் | : | | மறைவட்டம் | : | |




# அன்பியப் பணிக்குழு

## குழித்துறை மறைமாவட்டம்,

நடத்தும்

## "வாசிப்பை வாழ்வாக்குவோம்" இயங்கலை வினாடி வினா திறனாய்வுகள்

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் ஆன்லைன் (இயங்கலை) வினாடி வினா திறனாய்வுகளில் அனைத்து அன்பிய இறைமக்களும் பங்கேற்று விவிலியத்தை வாசித்து வாழ்வாக்குவோம். விவிலிய வாசிப்புத் திட்டத்தின் வழியாக இறைவனை அறிந்து கொள்வோம். அன்பியங்களில் இறையாட்சி மலரச் செய்வோம்.

பங்கேற்பாளர்கள் கவனத்திற்கு:

1. பதிவு படிவ வடிவம் இத்அடித்தளத்தின் உள்பக்கத்தில் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் அதை வெள்ளைத்தாளில் எழுதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
2. இத்திறனாய்வில் கத்தோலிக்கர் யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம்.
3. பதிவு படிவம் பூர்த்திச் செய்து அலுவலகத்தில் ஒப்படைத்தவர்கள் மட்டுமே திறனாய்வாளர்களாக கருதப்படுவார்கள்.
4. விவிலிய வினாடி வினா திறனாய்வில் பங்கேற்பாளர்கள் விவிலிய ஆதாரத்துடன் அதாவது எந்த பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என பதிவு செய்ய வேண்டும்.
5. விவிலிய வினாடி வினா திறனாய்வில் கலந்துக் கொண்டு ஓராண்டு முழுவதும் சேர்த்து 90 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெறுகிற அனைவருக்கும் சிறப்பு பரிசு உண்டு
6. விவிலிய வினாடி வினா திறனாய்வில் 90 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெறும் அனைவரும் நேரடி வினாடி வினா எழுத்துத் தேர்வுக்கு தகுதிப்பெறுவர். நேரடி எழுத்து தேர்வில் விவிலியம் பயன்படுத்தலாம்
7. நேரடி எழுத்துத் தேர்வில் முதல் 12 இடங்களைப் பெறுபவர்கள் நேரடி நேர்முக வினாடி வினா திறனாய்வில் பங்கேற்பார்கள். இதில்

| | |
|---|---|
| முதலிடம் | ரூ. **7,000/-** |
| இரண்டாமிடம் | ரூ. **5,000/-** |
| மூன்றாமிடம | ரூ. **3,000/-** |
| ஏனையோருக்கு | ரூ. **1,000/-** |

படிவம் ஒப்படைக்கும் இறுதி நாள்

**21.07.2025 திங்கட்கிழமை,** பணிக்குழு அலுவலகம், உண்ணாமலைக்கடை

தொடர்பு எண் : 88705 13177, 9487110298